27.10.2025

O.S.No. 26/2023

PW2– மாடசாமித்தேவர்– த/பெ. அருணாச்சலத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.10.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். யார், யார்மீது என்ன வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள், என்ன சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றவிவரமும் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்து சாட்சியம் அளிக்க வரவில்லை, நானாகதான் வந்தேன். நான் இடம் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் என்னசொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றவிவரம் எனக்கு தெரியாது.

2. எனக்கு நன்னித்தேவரை தெரியும். நன்னித்தேவர் ஆயுளுக்குபின் அவரது 2 மகன்களும் அவரது சொத்தை சமமாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எந்த சொத்து, எங்குள்ள சொத்து சம்பந்தமாக தாக்கல்செய்துள்ளார்கள் என்று தெரியாது. எனது சொத்து உள்ளதாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. வாதிஅழைத்ததன்பேரில் நான் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

3. எனது சொத்துக்கள் எந்த புலஎண்ணில், எவ்வளவு விஸ்தீணரத்தில் உள்ளது என்று நேரடியாக பார்த்தால் தெரியாது, ஆவணங்களை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எனக்கு போதிய படிப்பு இல்லாததால் மற்றவர்கள் எனது ஆவணத்தை படித்துக்காண்பித்தால் தான் ஆவணவிவரம் புரியும் என்றால் சரிதான். வாதிவேலுச்சாமி தாவா இடத்திற்கு மேற்குபக்கம் எனது இடம் இருப்பதால் என்னை சாட்சியம் அளிக்க வரசொன்னார், அதனால் நான் வந்தேன். தாவா சொத்தின் மேற்குபக்கம் உள்ள சர்வே எண் தெரியாது, வடபக்கம் உள்ள சர்வே எண்ணும் தெரியாது. எனக்கு நான்குதிசைகளிலும் உள்ள சர்வே எண் தெரியாது, வாதி பயிர் செய்தது மட்டுமே தெரியும். நேற்று வாதி சோளம் நாற்று விதைத்தார்.

4. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி அனுபவம் செய்துவருகிறார், வாதி சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.